<u>சாதாரணக்கூட்டம்</u>

**விளம்பி வருடம் ஆனி மாதம் 30ஆம் தேதி 2019ம் வருடம் ஜுலை மாதம் 15ம் தேதி (15.07.2019) திங்கட் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற அம்பாசமுத்திரம் நகர் மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை: திரு.ஜெ.பிரேம்ஆனந்த்,B.Sc.,**
தனி அலுவலர்/ஆணையாளர்
அம்பாசமுத்திரம் நகராட்சி

**பொருள் எண்.1**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் திரு.சு.முத்து என்பவர், ஜுலை–2018ல் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை மூலம் நடத்தப்பட்ட களப்பணி உதவியாளர் (உள்ளாட்சி) பயிற்சி முடித்துள்ளதாகவும், தனக்கு திரு.கே.தாணுப்பிள்ளை என்பவர் களப்பணி உதவியாளராக பணிபுரிந்து 15.02.1985ல் காலஞ்சென்றுள்ளதால் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தில் பதவி உயர்வு மூலம் பணி நியமனம் செய்ய வேண்டி கொடுத்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

களப்பணி உதவியாளர் பணியிடம் 15.02.1985 முதல் காலியாக இருப்பதால், அதற்கு பணியிட அனுமதி வழங்கி பூர்த்தி செய்திடவும், இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர் திரு.சு.முத்து விண்ணப்பத்தினை பரிசீலணை செய்திடவும் வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பித்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 482 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

அம்பாசமுத்திரம் நகராட்சியில் கீழ்க்காணும் விபரப்படி காலியாக உள்ள கடைகள் மற்றும் தரைவாடகை அடிப்படையிலானவற்றை 10.07.2019 அன்று ஏலமிட்டவை மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**<u>நகராட்சி பேருந்து நிலைய கடைகள்:</u>**

1. வடபகுதி வணிக வளாகம் – தரைத்தளம் கடை எண்.8
2. வடபகுதி வணிக வளாகம் – முதல் தளம் கடை எண்.8

3. தென்பகுதி வணிக வளாகம் – தரைத்தளம் கடை எண்.10
4. ரயில்நிலைய சாலையில் பயனற்ற பயணிகள் நிழற்குடை

**அலுவலக குறிப்பு:**

10.07.2019 அன்று ஏலமிடப்பட்டதில் வரிசை எண்.4ல் உள்ளவற்றை அம்பாசமுத்திரம் திரு.P.சுந்தர் என்பவர் அதிகபட்ச ஏலமாக ரூ.3200/– கேட்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம். வ.எண்.1 முதல் 3 வரையிலானவற்றை மறுஏலம் கோரிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 483 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 3**

அம்பாசமுத்திரம் நகராட்சி சங்கரன் கோவில் ரோடு மேல அம்பாசமுத்திரம் வருவாய் கிராமம் சர்வே எண் 375/2A2 ல் சலவையாளர் கூடம் (Dhobikana) அருகில் காலியாக உள்ள இடத்தில் 2018 – 2019 தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் Micro Compost Center – 3 TPD அமைய இருக்கிறது. இப்பணிக்கான மதிப்பீடு ரூ49.00 லட்சம் ஆகும். மேற்படி சர்வே எண்ணில் உள்ள அரசு புறம்போக்கு காலியிடத்தில் 50 செண்ட் நிலத்தினை ஒதுக்கீடு செய்து பணியை மேற்கொள்ள அனுமதி கேட்டு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கருத்துரு சமர்பித்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 484 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 4**

அம்பாசமுத்திரம் நகராட்சி பொதுநிதி 2019–20ன் கீழ் நகராட்சிப் பகுதியில் வார்டு 1 முதல் 21 வரை வீடுகள் தோறும் குப்பை எடுக்கும் பணியான முதல் நிலை சேகரிப்பு மற்றும் தெருக்கள் தோறும் சுத்தம் செய்யும் திடக்கழிவு மேலாண்மை பணியினை பணியாளர்கள் அமர்த்தி குப்பைகள் சேகரிக்கும் மையத்தில் சேர்த்தல் மற்றும் திடக்கழிவுகளை இறுதியாக்கம் செய்தல் பணியினை தனியார் மூலம் செய்திட இரண்டு உறை முறையில் (TWO COVER SYSTEM) ஒப்பந்தப்புள்ளிகள் 05.07.2019 ல் பெறப்பட்டது.பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்

நுட்பம்(Technical bid) 05/07/2019 அன்று பிற்பகல் **3.30** மணியளவில் ஒப்பந்தக்காரர் முன்னிலையில் திறக்கப்பட்டது. Techniqal bid தகுதியின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர்களின் விலைவிகிதம் (price bid) 10/07/2019 காலை 11.00 மணியளவில் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டது.மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளிக்கான விலைவிகித ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலை விபரம்** | **கலந்து கொண்ட ஒப்பந்தகாரர்களின் பெயர்** | **மதிப்பீட்டிலிருந்து அதிகம் / குறைவு** |
|---|---|---|---|
| 1. | Engaging of workers for Municipal Solid Waste Management Services | Saram Enviro Services Pvt.Ltd | மதிப்பீட்டு விலை விகிதம். |
| | | Ourland Engineering Works Pvt.Ltd | மதிப்பீட்டிலிருந்து 7.04%அதிகம் |

<u>அலுவலக குறிப்பு :</u>

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அதிகத்தில் குறைவு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Saram Enviro Services Pvt Ltd.ன்(மதிப்பீட்டு விலை விகிதம்) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 485 / அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்: 5**

அம்பாசமுத்திரம் நகராட்சி, பொது சுகாதார பிரிவு தெருவில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து பிடித்த இடத்திலேயே நாய்களை கொண்டு விடும் பணிகள் இந்நகராட்சியில் **2013–14** மற்றும் **2014–15**ஆம் ஆண்டுகளில் **735(359+379)** தெரு நாய்களுக்கு அம்பாசமுத்திரம் அரசு கால்நடை மருத்துவமனையில் வைத்து ராஜேஸ்வரி கௌசாலா டிரஸ்ட் மூலம் நடத்தப்பட்டது. மேலும், அதற்கான செலவினத் தொகையும் சென்னை பாரத பிராணிகள் நலவாரியத்திடமிருந்து பெறப்பட்டது.

மேலும், **2018–19**ம் ஆண்டிற்கு தற்போதைய கணக்கெடுப்பின்படி **1441** தெருநாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்படாமல் உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. அதனை கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் பணிக்கு **10.07.2019**ம் தேதி ராஜேஸ்வரி கௌசாலா டிரஸ்ட் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற கடிதத்தின்படி, மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் தெருநாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி முகாம் நடத்திடவும் கண்காணிப்பு குழுக் கூட்டம் நடத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 486 / அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) J,பிரேம்ஆனந்த்,**
**தனிஅலுவலர்/ஆணையாளர்**
அம்பாசமுத்திரம் நகராட்சி

//உண்மை நகல்//

**ஆணையாளர்(பொ)**
அம்பாசமுத்திரம் நகராட்சி